தினகரன்
மதுரை

| நாளை | |
|---|---|
| அதிகபட்சம் | குறைந்தபட்சம் |
| 36.0 C / 97.0 F | 25.0 C / 77.0 F |

வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்

டிஎன்பிஎஸ்சி குரூப் - 2 மாதிரி வினா விடை பக்கம் 14

அல்சரை அடிச்சு தூக்கும் ஆட்டு கொழுப்புக்குடல் பக்கம் 16

# வாரிசுதாரருக்கு ஓய்வூதிய ஆணை



ஒப்பந்த தூய்மை பணியாளரின் வாரிசுதாரருக்கு ஓய்வூதிய ஆணையை மேயர் இந்திராணி பொன்வசந்த் வழங்கினார்.

**மதுரை, ஜூலை 20:** மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில், பணியின்போது விபத்தில் இறந்த ஒப்பந்த தூய்மை பணியாளரின் வாரிசுதாரருக்கு இஎஸ்ஐ நிறுவன ஓய்வூதிய ஆணை வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது. இதில் மேயர் இந்திராணி பொன்வசந்த், கமிஷனர் தினேஷ் குமார் கலந்து கொண்டு ஆணையை வழங்கினர். இதன்படி ஒப்பந்த தூய்மை பணியாளர் கருப்பசாமி, கடந்த மார்ச் 22ல் அன்று பணி செய்த போது பஸ் மோதி இறந்தார். அவரது வாரிசாக உள்ள தாயாருக்கு இஎஸ்ஐ தரப்பில் மாதம் ரூ.8300 வீதம் வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும்.

இதற்கான ஆணை வாரிசுதாரருக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் துணை மேயர் நாகராஜன், சுகாதாரக் குழுத் தலைவர் ஜெயராஜ், மாநகர் நல அலுவலர் வினோத்குமார், சுகாதார அலுவலர் விஜயகுமார், இஎஸ்ஐ மண்டல இயக்குநர் உள்பட பலர் பங்கேற்றனர்.